# பிரஸார் பாரதி
# அகில இந்திய வானொலி சென்னை – 4

29 07 2025 TUESDAY 7.15 PM

## ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு நாட்டின் 140 கோடி மக்களும் துணை நின்றதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- உலகத்தரத்திலான கல்வி கட்டமைப்பை தேசிய கல்விக்கொள்கை உறுதி செய்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

- வேளாண்துறையில் நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **Pralay** ஏவுகணை ஒடிஷா கடற்கரையில் வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

- *Macau* ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சிராக் ஷெட்டி – சாத்விக் சாய்ராஜ் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

– இனி விரிவான செய்திகள் ----

**<<<<<>>>>>**

பஹல்காம் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுப்பதாக தாம் அளித்த வாக்குறுதி ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக நடைபெற்றுவரும் விவாதத்திற்கு பதிலளித்து பேசி வரும் பிரதமர், மத்திய அரசு தீவிரவாதிகளுக்கு எதிராக மேற்கொண்ட ராணுவ நடவடிக்கைகளுக்கு நாட்டின் 140 கோடி மக்களும் துணை நின்றதாகவும், அவர்களுக்கு இந்நேரத்தில் தமது நன்றியை தெரிவிப்பதாகவும் கூறினார்.

தீவிரவாதத்தை மண்ணோடு மண்ணாக புதைப்போம் என்று கூறிய அவர், தீவிரவாதிகள் யோசித்து பார்க்க முடியாத அளவுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள், ட்ரோன்கள் உள்ளிட்டவைகளை பயன்படுத்தி பாகிஸ்தானில் தொலைதூரத்தில் உள்ள தீவிரவாத முகாம்களும், வான்வழி தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டதாக பிரதமர் கூறினார்.

இந்த நடவடிக்கையில் முப்படைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ள ராணுவத்திற்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் அணு ஆயுத தாக்குதல் அச்சுறுத்தலுக்கு இந்தியா பயப்படாது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் பெரிய அளவில் உதவியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைக்கு 190 நாடுகள் எவ்வித ஆட்சேபமும் தெரிவிக்கவில்லை என்றும் பிரதமர் கூறினார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு ஒட்டுமொத்த உலகின் ஆதரவு கிடைத்துள்ள போதிலும், காங்கிரஸின் ஆதரவு கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் மீதும், நமது ராணுவத்தின் மீதும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு நம்பிக்கை இல்லை என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி குறை கூறினார்.

<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் மற்றும் ஆபரேஷன் மகாதேவ் ராணுவ நடவடிக்கைகள் மூலம், தீவிரவாதிகளுக்கு முடிவு கட்டப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதள பதிவில், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா மக்களவையில் ஆற்றிய உரையை பகிர்ந்துள்ள பிரதமர், இந்த இரு ராணுவ நடவடிக்கைகள் குறித்தும் முக்கிய தகவல்களை அவர் பகிர்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை அவர் பட்டியலிட்டதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

உலகத்தரத்திலான கல்வி கட்டமைப்பை தேசிய கல்விக்கொள்கை உறுதி செய்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய கல்விக்கொள்கையின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தை பூர்த்தி செய்வதில் தேசிய கல்விக்கொள்கை முக்கிய பங்காற்றுவதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் கல்வி கட்டமைப்புக்கு புத்துயிர் ஊட்டும் வகையிலும், மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் இது வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

காலம் கடந்து நிற்கும் நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை அடிப்படையாக கொண்டு நாட்டை கட்டமைப்பதற்கு இந்த கொள்கை வழிவகுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளார்ந்த மற்றும் ஒட்டுமொத்த தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும், எதிர்கால மாற்றங்களை கருத்தில்கொண்டு கல்வி கட்டமைப்பை தேசிய கல்விக்கொள்கை உருவாக்கித் தந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் கல்வி கற்போருக்கான அதிகாரத்தையும், புதுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையிலும் நாட்டின் எதிர்காலத் திட்டங்களை பூர்த்தி செய்யும் வகையிலும் கல்விக்கொள்கை அமைந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், 21-ஆம் நூற்றாண்டுக்கான நாட்டின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்துள்ளதாக திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வேளாண்துறையில் நவீன தொழில்நுட்பங்களை ஊக்குவிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது

மக்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த மத்திய வேளாண்துறை இணையமைச்சர் திரு ராம்நாத் தாகூர், வேளாண் துறையில் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து 43 நிறுவனங்களுக்கு 146 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் 2023-24-ஆம் ஆண்டில் 44 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ட்ரோன் பயிற்சி அளிக்கப்பட்டு, 44 ட்ரோன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு ராம்நாத் தாகூர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு இலக்குகளை துல்லியமாக தாக்கவல்ல **Pralay** ஏவுகணை நேற்றும், இன்றும் இரண்டு முறை ஒடிஷா கடற்கரையில் அமைந்துள்ள டாக்டர் ஏ பி ஜே அப்துல்கலாம் தீவில் வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணை, குறைந்த தூரத்திலோ அல்லது நெடுந்தூரத்திலோ உள்ள இலக்கை துல்லியமாக தாக்கவல்லது.

இந்த ஏவுகணை வெவ்வேறு இலக்குகளை ஒரே நேரத்தில் பலதரப்பட்ட குண்டுகளை கொண்டு தாக்கும் வல்லமை கொண்டது.

இந்த ஏவுகணையை தயாரித்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திற்கும், வெற்றிகரமாக சோதித்த பாதுகாப்புப் படையினருக்கும், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>**

இலங்கை கடற்படையினரால் இன்று கைது செய்யப்பட்ட ராமநாதபுரத்தை சேர்ந்த 14 மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தடையின்றி கைது செய்யப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரின் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கு மன ரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை சிறைகளில் தற்போதுள்ள 68 மீனவர்கள் மற்றும் 235 மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரை வலியுறுத்தியுள்ளார்.

**<<<<<>>>>>**

ஹைதராபாதை மாசில்லா நகராக கட்டமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெலங்கானா முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

ஹைதராபாதில் இன்று நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் நகரின் மையப்பகுதியில் காற்று மாசின் அளவை குறைப்பதற்கான நிரந்தர தீர்வுகளை காண வேண்டும் என்று அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

தில்லி, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட நகரங்களில் நிலவும் காற்று மாசு பிரச்சினைகளை ஆராய்ந்து, அதன் அடிப்படையில் மாசு கட்டுப்பாட்டு திட்டங்களை தயார் செய்யுமாறும் திரு ரேவந்த் ரெட்டி அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

**<<<<<>>>>>**

இயற்கை வேளாண்மை மூலம் மண்வள பாதுகாப்புத் திட்டம் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆறு தாலுக்காக்களில் 20 இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு இயற்கை விவசாயம் செய்வதற்கான இடுபொருட்கள் மானியம், பயிற்சி உள்ளிட்டவை அளிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte - ' அனுராதா – 53 Sec.)***

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

*Macau* ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சிராக் ஷெட்டி – சாத்விக் சாய்ராஜ் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-13, 21-15 என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Hang Yee low – Eng Cheong Ng** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Priya Konjengbam - Shruti Mishra** இணை, 21-15, 16-21, 21-17 என்ற செட் கணக்கில், தைவானின் **Ling Zih Huang – Szu Min Wang** இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

--------

**<<<<<END>>>>>**